

# கோவையில் டூஷீன் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தின விழா

கோவை, செப், 12: கோவையில் உலகளவில் டூஷீன் தசை சிதைவு நோய் தாக்கப்படுவது குறித்து விழிப்புணர்வு எம்.டி.சி.ஆர்.சி தன்னார்வ நிறுவனம் நடத்தியது.

கோவை ஜென்னிஸ் கிளப்பில் உலகளவில் டூஷீன் தசை சிதைவு நோய் பற்றிய விழிப்புணர்வு தினம் செப்டம்பர் 7 அன்று அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு மரபனு பரிசோதனை, கலந்தாய்வு, பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான எம்.டி.சி.ஆர்.சி நிறுவனம் 50 க்கும் மேற்பட்ட டூஷீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு விழாவை ஜென்னிஸ் கிளப் வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு அரசு மருத்துவமனை டீன் டாக்டர் அசோகன் தலைமை வகித்தார். ராயல் கேர் மருத்துவமனை சேர்மன் டாக்டர் மாதேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும், நோபல் பவுண்டேஷன் நிறுவன அறங்காவலர் ரமேஷ் அந்தோனி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

எம்.டி.சி.ஆர்.சி.தன்னார்வ நிறுவனர் முனைவர் பி.ஆர். லஷ்மி தசை சிதைவு நோய் குறித்து கூறியதாவது. உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைகளுக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. இந்த நோய் மரபு வழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். குறிப்பாக ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும். இந்நோய்க்கு மருந்து இன்றளவிலும் கண்டறியப்படுவதில்லை. நாம் கற்ற அறிவியல் சமுதாயத்தை சென்றடைவதே எம்.டி.சி.ஆர்.சி யின் நோக்கமாகும். டூஷீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்திற்காக 12 ஆண்டுகளாக சேவையாற்றி வருகிறது. மாற்றுத்திறன் குழந்தைகள் என்ற பாகுபாடின்றி சமுகத்தில் பள்ளி கல்லூரி மாணவ, மாணவிகளை இவர்களுடன் ஒருங்கிணைப்பதே இவ்விழா வின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு கூறினார்.

விழாவில் குழந்தைகள் பட்டங்கள், பலூன்களை ஆகாயத்தில் பறக்கவிட்டனர். கீதாஞ்சலி பள்ளி மாணவியர்கள் பரதநாட்டிய நிகழ்ச்சியின் போது டூஷீன் குழந்தைகள் விநாயகர் வேடமணிந்து வந்தனர். குழந்தைகள் நெஞ்சுக்கு நீதியும் என்ற பாரதியாரின் பாடலை பாடினர். பெற்றோர்களும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தினர். இந்துஸ்தான் கல்லூரி மாணவ, மாணவிகள் குழந்தைகளுடன் சேர்ந்து ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடத்தினர்.